## வட மத்திய மாகாண சபை - 2019

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

வடமத்திய மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(2) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பறிக்கை மற்றும் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பு திறைசேரி உட்பட அவ்வவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன எனவும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன எனவும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 28 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்கள், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் அனைத்து தேவைகளுடன் இணங்குவதாயின் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றன என காட்டப்படக்கூடாது எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்று க்களில் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் கீழ், 1 ஆம் பந்தியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிப்படு த்தல்களின் படி குறிப்பிட்ட தேவைக்கு இணங்கியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றன என காட்டப்படுமெனின் நிதிக்கூற்றுக்கள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அனைத்துத் தேவைகளுடன் இணங்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

(ஆ) 2015 ஆண்டின் போது அது வரை மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கை களில் காணப்பட்ட மீதிகள் மற்றும் அதன் பின்னைய ஆண்டுகளில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கு வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள், ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு உண்மையாகவே சொத்துக்கள் என இனங்காணப்பட்ட சொத்துக்கள், ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண கணக்கிற்கு மாற்றும் நடைமுறை ஒன்றிற்கு மாகாண சபை ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் படி, 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என அறுதியாக இனங்காணப்படாமல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரண சீராக்கல் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீதி ரூபா3,920,198,951 தொகையாகும். | சீராக்கல் கணக்கில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சொத்துக் களின் மீதிகள் மிக விரைவாக இனங் கண்டு குறிப்பிட்ட சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்ற வேண்டும். | சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் மூலம் சொத்துக்களை அறுதியாக இனங்காணும் வரை சீராக்கல் கணக்கில் தடுத்து வைக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்ட பெறுமதியை விட மிகையான சொத்துக்களின் பெறுமதி ஒன்று அந்தக் கணக்கு ஊடாக சொத்துக்கள் முகாமைத்துவ முறைமைக்கு மாற்றப்படுகின்ற காரணத்தினால் ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கில் வாகனங்கள் மற்றும் காணி அபிவிருத்தி செய்தல் கணக்குகளுக்கு உரிய ரூபா 1,059,640,472 இற்கான கூட்டு மறை மீதி ஒன்று ஏற்பட்டிருந்தது. குறிப்பிட்ட மறை மீதிகள் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கில் காணப்பட்ட நேர் மீதிகளுடன் எதிரீடு செய்யப்பட்டு இருந்தமையால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதன் மீதி அப்பெறுமதியினால் குறை வாகக் கணிக்கப்பட்டிருந்தது. | ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கின் மறை மீதி மாகாண சபை நிதியத்தின் மீதியுடன் சீராக்கல் செய்து காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. | |
| (iii) ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கில் மறை மீதி ஒன்று சித்தரித்துக்காட்டும் சொத்துக்கள் கணக்கு ஒன்று தொடர்பாக முன்னைய காலப்பகுதி ஒன்றின் போது கைவிடப்பட்ட சொத்தொன்று பின்னர் பௌதீக | காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி செய்தல் கணக்கின் மறை மீதி மாகாண சபை நிதியத்தின் மீதியுடன் சீராக்கல் செய்து காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. | |

| | | |
|---|---|---|
| ரீதியாக இனங்கண்டு அதனை அச்சீராக்கல் கணக்கின் ஊடாக கணக்கீடு செய்யும் போது அதன் மறை மீதி அதிகரித்தல் சுயமாகவே ஏற்படுகின்றது. அதனை உறுதி செய்து, 2019 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கு மீதியினுள் அடங்கி யுள்ள காணி, காணி அபிவிருத்தி கணக்கு மீதி ரூபா 1,022,900,000 இற்கான மறைப் பெறுமதி ஒன்றாக காணப்பட்ட போதிலும் ஆண்டின் போது இனங்காணப் பட்ட ரூபா 10,146,001 இற்கான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது அதன் வருட இறுதி மீதி ரூபா 1,033,046,000 தொகையாகியுள்ளது. மேலும், அங்கு வேறு கொடுக்கல் வாங்கல் ஏதும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) மேலே (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழுக்கள் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள் பொறித்தொகுதிகள், உபகரண சீராக்கல் கணக்கில் மீதியாகிய ரூபா 3,920,198,951 உடன் சீராக்கல் செய்த போது அத் திகதியில் உள்ளவாறு அக் கணக்கின் சரியான மீதி | ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் சீராக்கல் கணக்கின் மறை மீதி மாகாண சபை நிதியத்தின் மீதியுடன் சீராக்கல் செய்து காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| ரூபா 4,989,985,424 தொகை ஆக காணப்பட்ட காரணத்தினால் அதன் ஒட்டு மொத்த பற்றாக் குறை தொகை ரூபா 1,069,786,473 தொகையாக காணப்பட்டது. | | |
| (v) மேலே (i) இல் குறிப்பிடப் பட்டுள்ள மீதியில் அடங்கியுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் மற்றும் ஏனைய மூலதனச் சொத்துக்கள் தனதாக்குதல் அல்லது அபிவிருத்தி செய்வதற்கான மீளாய்வாண்டின் செலவு ரூபா 1,722,946,450 தொகையாக இருந்த போதிலும் அவற்றில் ரூபா 1,559,526,693 தொகை உண்மையாகவே மூலதனப்படுத்த வேண்டியதா அல்லவா என இணங்காண்பதற்கு முடியாமை கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது. | மீளாய்வாண்டின் ரூபா 1,722,946,450 தொகைக்கான மூலதனச் செலவு முற்றாக மூலதனப்படுத்தப்பட வேண்டும். | சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள ஆண்டிற்கான செலவுகளில் அறுதியாக சொத்துக்கள் என இனங்காணப்பட்ட செலவுகள் மாத்திரம் சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்படும் என அறிவிக்கின்றேன். |
| மேலே பற்றாக்குறைகள் காரணமாக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாற ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதி சரியாக நிதிக்கூற்றுக்களின் மூலம் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது என கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதுள்ளது. | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதி சரியாக நிதிக் கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் படி முதலீடுடொன்று, பண மற்றும் பணத்திற்கு சமமானவைகள் என கணிக்கப்படுவது அவை 03 மாதங்களுக்கு அல்லது அதற்கு குறைவான காலப்பகுதியுள் முதிர்ச்சி அடையும் காலம் காணப்படின் மாத்திரம் எனினும் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் பணமும் பணத்துக்கு சமமானவைகளும் என காட்டப்பட்டிருந்த ரூபா 2,090,590,117 இற்கான பெறுமதியில் 2011 ஆம் ஆண்டு முதல் காணப்படும் முதிர்ச்சி அடையும் காலம் 06 மாதங்களை உடைய பெறுமதி ரூபா 589,857,267 இற்கான சுயமாக புதுப்பிக்கப்படும் (Auto Renewal) அடிப்படையில் பேணப்பட்டு வந்த நிலையான வைப்புக்களும் அடங்கியிருந்தன. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பணமும் பணத்துக்கு சமமானவைகளினது மீதி மற்றும் முதலீட்டு மீதி அப் பெறுமதியினாலேயே முறையே மிகையாக மற்றும் குறைவாக கணிக்கப்பட்டு இருந்தது. | முதிர்ச்சி அடையும் காலம் 06 மாதங்களைக் கொண்ட ரூபா 589,857,267 தொகை பெறுமதியான நிலையான வைப்புக்கள் நிதி நிலைமைக்கூற்றில் முதலீடுகள் என காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் அருவ சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ள ரூபா 66,956,946 தொகைக்கான மீதியுள் ரூபா 56,462,237 தொகை பெறுமதியான சூரிய வலு முறைமை மற்றும் வாயுசீராக்கல் முறைமை மின்சக்தி முறைமை ஆகிய உருவச் சொத்துக்கள் உட்பட்டிருந்தமையால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அருவச் சொத்துக்களின் மீதி மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்களின் மீதி முறையே ரூபா 56,462,237 தொகையினால் மிகையாக மற்றும் குறைவாகக் கணிக்கப்பட்டிருந்தது. | சூரியசக்தி முறைமை, வாயு சீராக்கல் முறைமை, மின்சக்தி முறைமை ஆகிய சொத்துக் கள் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங் களின் கீழ் காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் படி 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 59,800,313 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் சான்றிதழின் படி பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 29,791,905 தொகை ஆகும். அதன் படி நிதிக்கூற்றுக்களில் மிகையாகக் காட்டப்பட்டிருந்த பெற வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 30,008,408 தொகை ஆகும். | பெற வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதிக்கூற்றுக்களின் படி 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முதலீட்டுக்களின் பெறுமதி ரூபா 589,857,266 தொகை எனினும் நிலையான வைப்புக்கள் புதுப்பித்தல் அறிவித்தல் (Renewal Notes) இன் படி அது ரூபா 678,392,867 தொகையாகக் காணப்பட்டமையால் அத் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் முதலீடுகளின் பெறுமதி ரூபா 88,535,601 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்கள் புதுப்பித்தல் அறிவித்தல் (Renewal Notes) இன் படி காணப் பட்ட முதலீட்டுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

### 1.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 16 இன் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 14,589,974 இற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தின் மீதி வாணிப முற்பணக் கணக்கு இரண்டுடன் தொடர்புடையது. அவ்வாறாயினும் அந்த இரண்டு முற்பணக் கணக்குகள் தொடர்பான மீதிகளை வெவ்வேறாக இணங்காணக் கூடிய விதமாக மாகாண திறைசேரியினால் பதிவுகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தின் மீதி ஒவ்வொரு வாணிப முற்பண கணக்கின் படி வெவ்வேறாக இனங்காணக் கூடிய விதமாக பதிவுகள் பேணப் பட்டு வரவேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண திறைசேரி கட்டுநிதி பெறுவனவுப் பதிவேடு மத்திய அரசின் கட்டுநிதி பெறுவனவு மூலவளங்களை வெவ்வேறாக இனங் காணக்கூடிய விதமாக பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | மத்திய அரசின் கட்டுநிதி பெறுவனவு மூலவளத்தை வேறாக இனங் காணக்கூடிய விதமாக கட்டுநிதி பெறுவனவுப் பதிவேடு பேணப் பட்டு வரவேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

**1.8 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக் களில் குறிப்பு 01 இன் பிரகாரம் 03 மாகாண அமைச்சுக்கள் தொடர்பாக தீர்க்கப்பட்டிருக்காத ரூபா 27,780,867 இற்கான கட்டுநிதி மீதிகள் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்பட்டு வருகின்றது. அம் மீதிகளில் 95 சதவீதமானவைகள் 09 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் ரூபா 26,405,861 இற்கான மீதி ஒன்று முதலமைச்சி னால் தீர்க்கப்பட வேண்டிக் காணப்பட்டது. | 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்பட்டு வரும் கட்டுநிதி மீதிகள் குறிப்பிட்ட 03 அமைச்சுக்களினாலும் தீர்க்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

## 1.9 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 வருமானக் குறியீடுகள் தொடர்பான மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 3,525,350,000 தொகை ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 2,472,117,757 தொகையாக இருந்தமையால் முரண்கள் ரூபா 1,053,232,243 தொகையாக இருந்தது. குறிப்பிட்ட முரண் மதிப்பீட்டு வருமானத்தின் 08 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீட்டு வருமானத்தில் சுமார் 70 சதவீதம் அறவீடு செய்யப்பட்டதுடன், அவை 85 சதவீத மட்டத்தையேனும் மிகைத்திருக்க வேண்டியிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் போது மாகாண சபை நிதியத்தில் ரூபா 40,527,608 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 275,543,746 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் நிதி விளைவுகளில் ரூபா 316,071,354 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

### 2.2. வருமான மற்றும் செலவு முரண்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவு தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீட்டு | உள்ளவாறான | முரண்கள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண்கள் |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 4,017.5 | 3,040.6 | 976.9 | 3,582.4 | 3,128.5 | 453.9 |
| வரி அல்லாத வருமானம் | 713.4 | 870.2 | (156.8) | 657.5 | 832.8 | (175.3) |
| அரச மானியம் | 19,851.0 | 16,680.6 | 3,170.4 | 18,099.9 | 14,624.7 | 3,475.2 |
| ஏனைய பெறுவனவுகள் | 100.0 | 966.7 | (866.7) | 4,826.4 | 2,137.6 | 2,688.8 |
| மொத்தம் | 24,681.9 | 21,558.1 | 3,123.8 | 27,166.2 | 20,723.6 | 6,442.6 |
| மீண்டுவரும் செலவுகள் | | | | | | |
| ஆளுக்குரிய சம்பளங்கள் வேதனங்கள் | 15,458.4 | 15,741.6 | (283.2) | 14,191.1 | 14,521.9 | (330.8) |
| ஏனைய செலவுகள் | 4,918.9 | 5,154.4 | (235.5) | 4,123.8 | 4,603.5 | (479.7) |
| உப கூட்டுத்தொகை | 20,377.3 | 20,896.0 | (518.7) | 18,314.9 | 19,125.4 | (810.5) |
| மூலதனச் செலவுகள் | 4,068.0 | 702.7 | 3,365.3 | 3,921.3 | 1,322.7 | 2,598.6 |
| மொத்தம் | 24,445.3 | 21,598.7 | 2,846.6 | 22,236.2 | 20,448.1 | 1,788.1 |

(அ) மீளாய்வாண்டிற்கான வரி மற்றும் வரியால்லாத வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,910,898,986 தொகையாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அந்த வருமானம் ரூபா 3,961,288,775 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான வரி மற்றும் வரி அல்லாத வருமானங்களின் குறைவடைதல் ரூபா 50,389,789 தொகை ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் மாகாண முதலீட்டுச் செலவு ரூபா 702,686,653 தொகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது அவை ரூபா 1,271,521,856 தொகையாக இருந்தமையால் முதலீட்டுச் செலவுகள் ரூபா 568,835,203 இனால் அதாவது 45 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த செலவு ஆகிய ரூபா 21,598,665,655 இல் முதலீட்டு செலவு ரூபா 702,686,653 தொகையாகக் காணப்பட்டமையால் மாகாண அபிவிருத்தி அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் மொத்தத் செலவில் 03 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு குத்தகை தவணை செலத்துதல் ரூபா 18,847,396 தொகையாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அவை ரூபா 3,806,040 தொகையாகக் காணப்பட்டமையால் அச் செலவு ரூபா 15,041,356 தொகையினால் அதாவது 395 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 03. நியதிச் சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள் / வாணிப முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்

## 3.1 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் போது அதிகார சபையின், ஊழியர் களுக்கு செலுத்தியிருந்த ஆனால் மீண்டும் அறவீடு செய்யப்படாதிருந்த கடன் பெறுமதி ரூபா 776,511 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கான வட்டி கணித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | அறவீடுகள் நிலுவை யாக காணப்பட்ட அனைத்துக் கடன் மீதிகளும் அவற்றிற்கான வட்டியுடன் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்யவதற்காக நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | பெருந்தெருக்கள் திணைக்களத் தின் ஊழியர் கடன் என சுமார் 12 வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள | பழைய கடன் மீதி களை உரிய ஊழியர் களிடம் அறவீடு செய்வதற்கு | இந்த கடன்பட்டோர் இறந்துள்ளதுடன் பிணையாளர்கள் நிறுவனத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 158,082 இற்கான தொகை ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படாமையால் அம் மீதியை பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (இ) | அதிகார சபைக்கு சொந்தமான நடைமுறை அல்லாத சொத்துக் களின் கொள்வனவு செய்த திகதி, எண்ணிக்கை மற்றும் பெறுமதி ஆகிய தகவல்கள் அடங்கும் விதத்தில் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை நாளது வரை ஆக்கப்பட்டிருக்காமை, சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் விடயத்துக்கு பொறுப்பான பெண் உத்தியோகத்தர் விளங்கிக் கொண்டுள்ளவாறு சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து சொத்துக்கள் முகாமைத்துவ முறைமைக்கு உட்படுத்தி யிருத்தல், சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை மற்றும் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பெறுமதிகளில் இடையே சீராக்கல் மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் அதிகார சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதியின் உண்மைத் தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தி அடைய முடியாதுள்ளது. | அதிகார சபைக்கு சொந்தமான நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுமதி கூட்டிய வரிக் கோவை 2015 செப்தெம்பர் மாதம் முதல் செயற் படாத நிலைமைக்கு ஆளாக்கப் பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் 2015 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 5,357,471 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,610,044 தொகை ஆக மொத்தம் ரூபா 9,967,515 இற்கான பெறுமதி கூட்டிய வரி வாடிக்கையாளர்களிடம் இருந்து சேரிக்கப்பட்டிருந்தது. | பெறுமதி கூட்டிய வரி கோவை செயற்படாத நிலைமையில் காணப்பட்டதால் வாடிக்கையாளர்களிடம் குறிப்பிட்ட வரி அறவிடப்படக் கூடாது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி பெறுமதி கூட்டிய வரி கோவையை செயற்படு நிலைக்கு மாற்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 3.2 முதலமைச்சு நிதியம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1992 இன் 05 ஆம் இலக்க பிரதான அமைச்சு நிதியத்தின் நியதிச் சட்டத்தின் பிரிவு 3(1) மூலம் நிதியத் தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மூலதனம் அதன் நிருவாக சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. நிதியத்தின் நிர்வாக சபை முதலமைச்சர் மற்றும் எதிர்கட்சி மந்திரிமார் இருவர் உட்பட 06 பேர்களை கொண்டிருந்ததுடன், மாகாண சபை களைக்கப்பட்ட பின்னர் நிதியம் பேணப்படுவது தொடர்பாக நடைமுறை ஒன்று நியதிச் சட்டத்தில் காட்டப்பட்டிருக் | மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் நிதியம், பேணப்பட வேண்டிய நடைமுறை அல்லது செயலிழக்கப்படும் என குறிப்பிட்டு நியதிச் சட்டத்தை திருத்த வேண்டும். | மாகாண சபை கலைக்கப் பட்டிருப்பதால் நியதிச் சட்டத்தை திருத்துவதற்கு முடியாதுள்ளது என அறிவிக்கின்றேன். |

காமையால் மாகாண சபை கலைக்கப்பட்ட 2017 ஒக்தோபர் 01 முதல் நிதியம் செயற்படாது காணப்பட்டது.

**04. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 அரச மானியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 3,761 மில்லியனிற்கான அங்கீகரிக்கப்பட்ட அரச மானியத்தில் 50 சதவீதம் ஆகிய ரூபா 1,896 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்ப்பட்ட ஏற்பாடுகளை உச்ச மட்ட அளவில் பயன் படுத்த வேண்டும் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**4.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர் வேலைகளுக்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,487 மில்லியன் தொகைக்காக 1,437 திட்டங்கள் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. அவ்வாறாயினும் அவற்றில் 50 சதவீதத்திலும் குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 116 | அனைத்து பணமும் திட்டத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

வேலைத் திட்டங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 394 மில்லியன் தொகையாகும்.

### 4.1.3 கல்வி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 மே 24 ஆந் திகதிய 1/வி.அ/2/84 இலக்கங் கொண்ட கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் விஷேட கல்வி அலகு ஒன்றிற்கு பிள்ளைகள் சேர்க்கும் போது, விஷேட கல்வி விடயத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விஷேட கல்வி விடயத்துக்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்கள் விஷேட கல்வி ஆசிரியர்கள் ஆரம்ப பிரிவு/ விடயத்துக்கு பொறுப்பான ஆசிரியர்கள் ஆகியவர்களில் 03 பேர் அடங்கிய குழு ஒன்றின் மூலம் விஷேட தேவையுடைய மாணவர் களை இனங்காணல் மேற்கொள்ளப் படல் வேண்டும். அவ்வாறாயினும் வட மத்திய மாகாணத்தில் அந்த நடைமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்ததால் பொதுவான வகுப்பறையில் கல்வி கற்பிக்க வேண்டிய வாசிப்பு மற்றும் எழுதும் திறமை குறைந்த மட்டத்தில் காணப்படும் பிள்ளைகள் முன் | விஷேட கல்வி அலகு ஒன்றிற்கு பிள்ளைகளை சேர்க்கும் போது, சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள 03 உத்தியோகத் தர்களைக் கொண்ட குழு ஒன்றின் மூலம் விஷேட தேவை உடைய பிள்ளைகளை இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் நியமனம் செய்யப்படும் குழு ஒன்றின் மூலம் விஷேட தேவையுடைய பிள்ளைகளை இனங்காணல் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | பிள்ளைப்பருவ கல்வியினை பெற்றிருக்காத பிள்ளைகள் மிக வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண பிள்ளைகள் மற்றும் சுத்தத் தன்மை மற்றும் முறையான தன்மை குறைவான பிள்ளைகள் அநேகமானோர் விஷேட கல்வி அலகுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2012 நவம்பர் 23 ஆந் திகதிய 42/2012 இலக்கங் கொண்ட கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றிக்கை யின் ஐந்தாம் பந்தியின் பிரகாரம் விஷேட கல்வித் துறைக்காக நியமனம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், நியமனக் கடிதத்தில் எந்த துணை பாடங்கள் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் பிரதான பாடம் ஆகிய விஷேட கல்வித் துறையில் கடமையாற்றல் கட்டாயம் ஆகும். அவ்வாறாயினும் விஷேட கல்வி அலகு ஒன்றில் கற்பிப்பதற்காக முறையான பயிற்சிகளைப் பெற்றிருந்த 20 ஆசிரியர்கள் வடமத்திய மாகாணத்தில் ஏனைய பாடங்கள் கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | விஷேட கல்வித் துறைக்காக நியமனம் பெற்றிருந்த ஆசிரியர்கள், விஷேட கல்வித் துறையிலேயே சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (இ) | 2012 நவம்பர் 23 ஆந் திகதிய 42/2012 இலக்கங் கொண்ட கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் விஷேட கல்வி அலகுகளுக்காக குறைந்த அளவு 05 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதமேனும் அந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்த அளவு 05 மாணவர் களுக்கு ஒரு ஆசிரியர் வீதமேனும் | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | துறையில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அவ்வாறாயினும் வட மத்திய மாகாண 08 கல்வி வலையங்களில் விஷேட கல்வி அலகுகள் காணப்படும் 24 பாடசாலைகளில் அந்த துறையில் பயிற்சி பெற்றுள்ள 29 ஆசிரியர் களுக்கான வெற்றிடம் காணப்பட்டது. | விஷேட கல்வித் துறையில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். | |
| (ஈ) | வட மத்திய மாகாணத்தின் 08 கல்வி வலயங்களில் காணப்படும் 30 கல்வி வட்டாரங்களில் 04 வட்டாரங்கள் விஷேட கல்வி அலகுகள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அந்த கல்வி வட்டாரங்களில் காணப்படும் விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்கு விஷேட கல்வி பெறக்கூடிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளது. | விஷேட தேவை உடைய பிள்ளைகளுக்கு விஷேட கல்வி பெறக் கூடிய விதமாக அனைத்துக் கல்வி வட்டாரங் களிலும் விஷேட கல்வி அலகுகள் நிறுவப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (உ) | 2017 ஆண்டின் போது வட மத்திய மாகாண 03 கல்வி வலயங்களை சேர்ந்த 13 பாடசாலைகளுக்கு ரூபா 18.48 மில்லியன் செலவில் விஷேட கல்வி அலகுகளுக்காக கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஆண்டு இறுதி வரை குறிப்பிட்ட விஷேட கல்வி அலகு செயற்படுத்தப் பட்டிருக்காததுடன் மேலும் 12 பாடசாலைகளில் விஷேட கல்வி அலகுகளுக்காக பொருத்தமான கட்டிடங்கள் வழங்கப்பட்டிருக்க | விஷேட கல்வி அலகுகள் தேவையான பாடசாலைகளை சரியாக இனங்கண்டு கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு மற்றும் புதிய கட்டிடங்கள் வழங்குவதற்கு அதிகாரிகள் | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. அதன் படி விஷேட கல்வி அலகு தேவையான பாடசாலைகளை சரியாக இனங்கண்டு கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு அல்லது புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஊ) | 2007 மே 14 ஆந் திகதிய 2007/9 இலக்கங் கொண்ட கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் போது மற்றும் புனர்நிர்மாணம் செய்யும் போது அங்கவீனம் உடைய ஆட்களுக்காக நுழைவு வசதிகள் ஏற்படுத்தல் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடசாலையுள் நுழைவு வசதிகள் ஏற்படுத்தல் கட்டாயம் ஆகும். அவ்வாறாயினும், வட மத்திய மாகாணத்தின் 14 பாடசாலையில் காணப்படும் விஷேட கல்வி அலகுகளுக்காக பொருத்தமான முறையில் நுழைவு வசதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வட மத்திய மாகாணத்தின் காணப்படும் விஷேட கல்வி அலகுகளுக்காக அங்கவீனம் உடைய ஆட்களுக்காக நுழைவு வசதிகள் ஏற்படுத்த வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (எ) | 2017 ஜனவரி 30 ஆந் திகதிய ED/09/18/02/01/2 இலக்கங்கொண்ட அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்விக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு மற்றும் 1963/30 இலக்கங் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி 5-16 வருட வயதைக் கடக்கும் எல்லா | கல்விக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு மற்றும் 1963/30 இலக்கங் கொண்ட அதி விஷேட வர்த்தமானி | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| மாணவர்களையும் கட்டாயமாக கல்விக்கு ஈடுபடுத்தும் வேலைத் திட்டம் ஒன்று ஏற்படுத்து வதற்காக பாடசாலைக் குழு மற்றும் மேற்பார்வைக் குழு செயற்படுத்தப்பட வேண்டியதுடன் மாகாணத்தில் அமைந்துள்ள போசாக்கு பிரதேசங்களில் விஷேட கல்வி தேவையுடைய பிள்ளைகளை இனங் கண்டு பாடசாலைகளில் விஷேட கல்வி அலகுகளுக்கு சேர்க்கும் செய்முறையொன்று செயற்படுத்தப் பட்டதற்கான சான்றுகள் காணப்பட வில்லை. | அறிவித்தலின் படி 5-16 வயதை கடக்கும் அனைத்துப் பிள்ளைகளையும் கட்டாயமாக கல்வியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

### 4.1.4 சுகாதாரம்

-----------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுராதபுரம் கல்கிரியாகம பிராந்திய வைத்தியசாலையின் இரண்டு வைத்தியர்கள் 2019 ஆண்டின் போது கடமைக்கு வராத நாட்களில் கடமைக்கு வந்ததென நாட்குறிப் பேட்டில் பதிவு எழுதி இருந்ததென அவதானிக்கப்பட்டது. அவற்றில் பொறுப்பான மருத்துவ உத்தியோத்தர் என கடமையாற்றிய வைத்தியர் ஒருவர் கடமைக்கு வந்திருக்காத 99 நாட்களில் 396 மணித்தியாலங்களுக் காக மேலதிக கடமைப் படி என ரூபா 385,856 தொகை மற்றும் கடமைக்கு வராத 06 நாட்களில் விடுமுறை நாள் கடமைப் படி என ரூபா 25,739 தொகையும், அடுத்த | வரிசை அமைச்சு மற்றும் பிராந்திய சுகாதாரச் சேவை அலுவலகத்திற்கு காலாண்டு தோறும் அனுப்பப்டுகின்ற தங்கியிருக்கும் நோயாளர் அறிக்கை மற்றும் வெளி நோயாளர் தொடர்பான அறிக்கை ஒவ்வொரு வைத்தியருக்கும் வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| வைத்தியர் கடமைக்கு வராத 67 நாட்களுக்காக 268 மணித்தியாலங் களுக்காக மேலதிக கடமைப் படி என ரூபா 146,060 தொகை மற்றும் கடமைக்கு வராத 04 நாட்களுக்காக விடுமுறை நாள் கடமைப் படி என ரூபா 9,732 தொகையும் பெற்றிருந்தனர். பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர் சேவை முறை மாற்றக் குறிப்பு வருடத்தின் 03 மாதங்களுக்கு மாத்திரம் தயாரித்திருந்தார். | நாளாந்தம் மின்தபால் மூலம் அனுப்புவதற்கு அனைத்து வைத்தியசாலை களையும் பணித்தல் வேண்டும். | |

## 4.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 5(1) இல் 09 பிரதேச செயலகங்கள் தொடர்பாக மாகாண அரச உத்தியோகத்தரின் 09 முற்பணக் கணக்குகளில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கண்டறிய முடியாத ரூபா 1,399,872 இற்கான 07 வரவு மீதிகள் மற்றும் ரூபா 44,202 இற்கான 02 செலவு மீதிகள் காணப்பட்ட துடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் உள்ளவாறு 08 பிரதேச செயலங்களின் தீர்க்கப்படாத வரவு மீதி ரூபா 1,410,326 தொகையாகக் காணப்பட்டது. | அனைத்து கடன் பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை மிகவும் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 29 பிரதேச செயலகங்களில் 27 இல் இருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதிகளை உறுதிப்படுத்தல்களின் படி ரூபா 80,648,015 தொகைக்கான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 81,071,012 தொகையாக காணப்பட்டமையால் இணங்கப்படாத வித்தியாசம் ரூபா 422,997 தொகையாக இருந்தது. அதே போல் பிரதேச செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்களின் படி 02 வருடங்களை விட மிகையான காலத்தை விஞ்சிய தீர்க்கப்படாத பொது வைப்பு மீதி ரூபா 22,177,873 தொகையாக இருந்தது. | இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்தல் மற்றும் 02 வருடங்களுக்கு மிகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

### 4.3 தோற்றக் கூடிய முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்ட ஏற்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்கான அளவை சீட்டுக்கள், வேலை பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் சிட்டைகள் கொடுப்பனவுப் பொழிப்புக்கள் உட்பட ஆவணங்களின் மூலப் பிரதி மீது ஒரு சந்தர்ப்பத்திலும் அதே ஆவணங்களின் புகைப்பட பிரதி மீது வேறொரு சந்தர்ப்பத்திலும் ஆக இரட்டைக் கொடுப்பனவு | மோசடியாக பெற்றிருந்த ரூபா 8,608,290 தொகையை உடனடியாக அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் மோசடி செய்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று | இரட்டைக் கொடுப்பனவு மூலம் மிகையாக செலுத்தி இருந்த பணம் அறவிடப்பட்டு வருவதுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது 2020 பெப்ரவரி 26 திகதிய அளவில் இரட்டைக் கொடுப்பனவு மூலம் மோசடியாக பெற்றிருந்த தொகை ரூபா 8,608,290 ஆகும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

## 4.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தமுத்தேகம நூலக சேவை சபையின் கட்டிடம் நிர்மாணித்தல்<br>வட மத்திய மாகாண முதலமைச்சினால் விஷேட செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டின் போது தமுத்தேகம நூலக சேவை சபை கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 24,987,271 இற்கான தொகைக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (i) பெறுகை வழிகாட்டல் 6.2.2 பிரகாரம் ஆற்றலுள்ள கூறுவிலைதாரர் கூறுவிலை சமர்ப்பிக்கும் போது வழங்க வேண்டியிருந்த குறைந்த அளவு 21 நாட்கள் வழங்கப்படாமல் 05 நாட்கள் காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் ஒரு விலைகூறல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆற்றலுள்ள விலைகூறல் தாரர்களுக்கு கூறுவிலை சமர்பிப்பதற்காக குறைந்த அளவு 21 நாட்கள் கால எல்லை வழங்கப் பட வேண்டும். | குறைந்த அளவு 21 நாட்கள் காலம் வழங்கப்படல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ii) உடன்படிக்கையின் பிரகாரம் 2017 பெப்ரவரி 22 திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஜனவரி 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டி ருந்தமையால் உடன்படிக்கை யின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,498,727 தொகைக்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டி ருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப் பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 2,498,727 இற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (iii) ரூபா 25,204,783 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த இந்தக் கட்டிடம் 2020 ஜூலை 15 ஆந் திகதி அளவிலும் திறக்கப்படாமல் ஒரு வருடத்தை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி அளவிலும் திறக்கப்பட்டிருக்காத இக் கட்டிடத்தை விரைவாக திறக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

(ஆ) அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடின் மீது மேற்கொள் ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகள்

---------------------------------------------------------------

2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி வட மத்திய மாகாணத்தின் பாடசாலை களில் செயற்படுத்தப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | உடன்பட்ட தொகையாகிய ரூபா 21,946,787 தொகைக்கான 02 நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகளுக்காக ரூபா 9,066,775 இற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டது. அவ்வாறாயினும் அம் முற்பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யாத ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத ஒப்பந்தவேலை தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த முற்பணங்களை அறவீடு செய்வதற்கு மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை களை பூர்த்தி செய்யாத ஒப்பந்தக் காரர் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (ii) | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,707,275 தொகைக்கான உப செயற்திட்டம் ஒன்று அங்கீகரிக் கப்பட்ட சங்கம் ஒன்றிற்கு வழங்கும் போது குறிப்பிட்ட பொறியியலாளர் மதிப்பீட்டை விட ரூபா 292,725 தொகை மிகையான பெறுமதிக்கு உடன்படிக்கை கையொப்பமிடப் பட்டு இருந்தது. | அங்கீகரிக்கப்பட்டிருந்த சங்கங்களுக்கு ஒப்பந்த வேலை வழங்கும் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டை மிகைக்காது இருக்க வேண்டும். | தற்போது பொறியியலாளர் மதிப்பீட்டுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

## 4.5 செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

### 4.5.1 தாமதமாகிய செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிர்மாணிப்பதற்காக குறிப்பிட்ட இடம் ஒன்று இனங்காணாமல் செயற்திட்டங்களை திட்டமிடல், பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்தலும் விலைகூறல் ஆவணங்கள் தயாரித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டிருந்த முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை நிர்வாக வள நிலைய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 24,267,211 இற்கான தொகைக்கு முதலமைச்சு 2017 ஜுலை 31 ஆந் திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு இருந்தது. பின்னர் அனுராதபுர மாநகர சபை அதிகார பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் இணக்கப்பாடு வழங்கியிருந்தவாறு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தினால் செயற்திட்டத்தின் வேலை இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன், செயற் திட்டத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,079,562 இற்கான தொகை பயனற்ற செலவொன்றாகி இருந்தது. | குறிப்பிட்ட இடமொன்று இனங்கண்ட பின்னர் செயற்திட்டங்களுக்காக திட்டமிடல், பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் விலைகூறல் ஆவணங்கள் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இடமொன்று இனங்கண்ட பின்னர் செயற் திட்டத்தை திட்டமிடல், பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் விலைகூறல் ஆவணங்கள் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

### விளைவற்ற சொத்துக்கள்

----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 36,643,690 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த முதுனேகம மஹா வித்தியாலயத்தின் கனிஷ்ட, இரண்டாம் தர ஆரம்ப ஆய்வுகூட கட்டிடம் 2019 மார்ச் 01 திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும் மின்தொடர்பு இன்மையால் ஒரு வருடத்துக்கு மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 செப்தெம்பர் அளவில் விளைவற்றுக் காணப்பட்ட இந்தக் கட்டிடம் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. | மின்தொடர்பு பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | கலென்பிதுனுவெவ கல்வி வலயத்தின் பாடசாலைகளில் காணப்பட்ட 25 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் 22 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை ஆசிரியர் களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 செப்தெம்பர் அளவில் விளைவற்றுக் காணப்பட்ட இந்த 22 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (இ) | 05 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலத்துக்கு முன்னர் மூடப்பட்டிருந்த கலென்பிதுனுவெவ கல்வி வலயத்தை சேர்ந்த 04 பாடசாலை | 04 பாடசாலை களில் காணப்பட்ட சொத்துக்களை பயன்படுத்தும் | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | களில் காணப்பட்ட சொத்துக்கள் வேறு வெளித்தரப்பினரால் பயன் படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றை முறையாக சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தரப்பினருக்கு சாட்டுதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | 08 வலய கல்வி அலுவலங்களுக்கு விஷேட கல்விக்காக வழங்கியிருந்த பணத்தில் 2015 ஆண்டின் போது ரூபா 435,449 தொகை, 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 341,731 தொகை, 2017 ஆண்டின் போது ரூபா 358,730 தொகை மற்றும் 2018 ஆண்டின் போது ரூபா 378,239 தொகை ஆக ரூபா 1,514,149 தொகை பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | வலய கல்வி அலுவலகங் களுக்கு வழங்கப்படுகின்ற அனைத்து பணமும் முற்றாக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கிடைக்கும் பணத்தை முற்றாக பயன்படுத்துவதற்கு வலய பணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு ள்ளது என அறிவிக்கின்றேன். |

## 4.7 பதவியணி நிர்வாகம்

### 4.7.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தின் 186 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 பதவிகளில் 78 வெற்றிடங்கள் காணப்படல் அதன் செயலாற்றல் மீது பிரதிகூலமாக பாதித்துள்ளது. | 18 பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக் காக உத்தி யோத்தர்கள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்ப்பு அங்கீகாரத்திற் காக விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண சமூக சேவை திணைக்களத்தின் அத்தியவசியமான பதவிகளில் காணப்படும் 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் திணைக்களத்தின் செயலாற்றல் மீது பிரதிகூலமாக பாதித்துள்ளது. | காணப்படும் வெற்றிடங்களுக் காக உத்தியோகத்தர் கள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

**4.7.2 பாடசாலை பதவியணியினர்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கலென்பிந்துனுவெவ வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 03 பதவிகளில் 14 வெற்றிடங்கள் மற்றும் 02 பதவிகளில் 06 மிகைகள் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு மற்றும் மிகை ஊழியர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஆ) | கலென்பிந்துனுவெவ கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 05 பதவிகளில் 91 மிகைகளும் மற்றும் 04 பதவிகளில் 131 வெற்றிடங்களும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு மற்றும் மிகை ஊழியர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

### 4.7.3 வைத்தியசாலை பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விஷேடத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள், ஏனைய வைத்திய உத்தியோகத்தர்கள் நிறைவான வைத்தியசேவை உத்தியோகத்தர்கள், தாதி உத்தியோக்தர் உட்பட வடமத்திய மாகாண வைத்தியசாலைகளில் 1111 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக தேவையான பதவியணியினர் மத்திய அரசில் இருந்து விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை மற்றும் அதன் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 05 நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களினாலும் செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

## 5.2 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டுகள் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்க வில்லை. | பாராளுமன்றத்தில் வருடாந்த அறிக்கை கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

## 5.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வடமத்தி மாகாண சபை மற்றும் மாகாண சபை ஏனைய நிறுவனங்களினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நெருங்குவதற்காக அந்த குறிக்கோள்களை நோக்கிச் செல்லும் போது பெற்றுக்கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் இடைவெளிகள் போலவே முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகளை இனங்கண்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்கு வதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய இலக்குகள் அந்த இலக்குகளை பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் இடைவெளிகள் போலவே முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகள் இனங்காணப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |